Koviloor Digital Library

விநாயகர்

அகவல், காரியசித்தி மாலை, கவசம் 108 போற்றி

Acc: 15254
D24173

தங்கமயில்
தங்கம் + வைரம் + வெள்ளி + பிளாட்டினம்

333-A, செக்காலை ரோடு, காரைக்குடி, போன்: 04565-400553

Koviloor Digital Library

Koviloor Digital Library
15254

உ

சிவமயம்

KOVILOOR AND LIBRARY, KOVILOOR
A. No. 15254
3-2

விநாயகர் அகவல்
காரியசித்தி மாலை, கவசம்
ஸ்ரீ கணேச பஞ்சரத்னம்
விநாயகர் 108 போற்றி
துதிப்பாடல்கள்
பிள்ளையார் சிந்தனை
சரஸ்வதி சிந்தனை
வேழ முகம்

Koviloor Digital Library

ஸ்ரீ கணேச காயத்ரீ

ஓம் ஏகதந்தாய வித்மஹே!
வக்ரதுண்டாய தீமஹி!!
தந்நோ தந்தி: ப்ரசோதயாத்!

ஸ்ரீ மஹா கணபதி மூல மந்திரங்கள்

ஓம் ஸ்ரீம் ஹ்றீம் க்லீம் க்லௌம்
கம் கணபதயே வரவரத ஸ்ர்வஜனம்மே
வசமானய ஸ்வாஹா.
ஹ்றீம் கம் ஹ்றீம்
மஹா கணபதயே ஸ்வாஹா.

விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசைப் பாட
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெரிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளக்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்

Koviloor Digital Library 3 - 2

நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரு மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுந்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம் இது பொருளென
வாடா வகைதான் வந்தெனக்கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாதா ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்

Koviloor Digital Library

கருவிக ளொடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்து மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமுஞ் சதுர்முக சூட்சமும்

Koviloor Digital Library 3 - 2

எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமு மில்லா மனோலயந்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுடிற்குஒன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சுக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

Koviloor Digital Library

தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

விநாயகர் அஷ்டகம்-காரியசித்தி மாலை

பந்தம் அகற்றும் அநந்தகுணப்
பரப்பும், எவன்பால் உதிக்குமோ?
எந்த உலகும், எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ?
சந்த மறைஆ கமங்கலைகள்
அனைத்தும், எவன்பால் தகவருமே?
அந்த இறையாம் கணபதியை,
அன்பு கூரத் தொழுகின்றோம்.
உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருள், எவன்?
அவ் வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளி, யாவன்?
உலகம் புரியும் வினைப் பயனை
ஊட்டும் களைக்கண், எவன்? அந்த
உலக முதலைக், கணபதியை,
உவந்து சரணம் அடைகின்றோம்.

Koviloor Digital Library

இடர்கள் முழுவதும் எவனருளால்?
எரிவீழும் பஞ்செனை மாயும்?
தொடரும் உயிர்கள், எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்?
கடவுள் முதலோர்க்கு ஊறு இன்றிக்
கருமம் எவனால் முடிவுறும்? அத்
தடவு மருப்புக் கணபதி பொன்
சரணம், சரணம் அடைகின்றோம்
மூர்த்தி யாகித், தலமாகி,
முந்நீர் கங்கை முதலான
தீர்த்த மாகி, அறிந்தறியாத்
திறத்தி னானும், உயிர்க்குநலம்
ஆர்த்தி, நாளும் அறியாமை
அகற்றி, அறிவிப் பான் எவன்? அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.
செய்யும் வினையின் முதல், யாவன்?
செய்யப் படும் அப் பொருள், யாவன்?
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன் யாவன்?

Koviloor Digital Library

உய்யும் வினையின் பயன், விளைவில்,
ஊட்டி விடுப்பான் எவன், அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்.
வேதம் அளந்தும் அறிவரிய
விகர்தன், யாவன்? விழுத்தகைய
வேத முடிவில் நடம் நவிலும்
விமலன், யாவன்? விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்? எண்குணன், எவன்? அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.
மண்ணில் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்? நீரிடை நான்காய்
நண்ணி அமர்வான் எவன்? தீயில்
மூன்றாய் நவில்வான் எவன்? வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான், எவன்? வான் இடை ஒன்றாம்
அண்ணல், எவன்? அக் கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.

Koviloor Digital Library

பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன், யாவன்?
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன், எவன்? அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்.

விநாயகர் கவசம்

வளர்சிகையைப் பராபரமாய் வயங்கு விநாயகர் காக்க, வாய்ந்த சென்னி அளவுபடா அதிகசவுந் தரதேக மதோற்கடர்தாம் அமர்ந்து காக்க, விளரறநெற் றியைஎன்றும் விளங்கியகா சிபர்காக்க, புருவந் தம்மைத் தளர்வின்மகோ தரர்காக்க, தடவிழிகள் பாலசந் திரனார் காக்க,

கவின்வளரும் அதரங்கச முகர்காக்க, தாலங்கணக் கிரீடர் காக்க, நவில்சிபுகம் கிரிசைசுதர் காக்க, நனி வாக்கைவிநா கர்தாங் காக்க, அவர்நகைதுன் முகர்காக்க, அள்ளெழிற்செஞ் செவிபாச பணி காக்க, தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா சியைச் சிந்தி தார்த்தர் காக்க,

Koviloor Digital Library

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி காக்க,களங் கணேசர் காக்க, வாமமுறும் இருதோளும் வயங்குகந்த பூர்வசர்தாம் மகிழ்ந்து காக்க, ஏமமுறு மணிமுலை விக்கின விநாசன்காக்க, இதயந் தன்னைத் தோம கலுங் கணநாதர் காக்க, வகட்டினைத் துலங்கே ரம்பர் காக்க,

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க, பிருட்டத்தைப் பாவம் நீக்கும் விக்கின கரன்காக்க, விளங்கிலிங்கம் வியாளபூ டணர்தாங் காக்க, தக்குய்யந் தன்னைவக் கிரதுண்டர் காக்க,சக னத்தை அல்லல் உக்கண பன் காக்க, ஊருமைமங் களமூர்த்தி உவந்து காக்க,

தாழ்முழுந்தாள் மகாபுத்தி காக்க, இரு பதமேக தந்தர் காக்க, வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க, முன்கையை வணங்கு வார்நோய் ஆழ்தரச்செய் ஆசாபூ ரகர் காக்க, விரல்பதும அத்தர் காக்க, கேழ்கிளரும் நகங்கள் விநாயகர் காக்க, கிழக்கினிற்புத் தீசர் காக்க,

Koviloor Digital Library

அக்கினியில் சித்தீசர் காக்க, உமா புத்திரர்தென் னாசை காக்க, மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க, விக்கினவர்த் தனர் மேற் கென்னும் திக்கதனில் காக்க, வா யுவிற்கசகன் னன் காக்க, திகழ் உதீசி தக்கநிதி பன்காக்க, வடகிழக்கில் ஈசநந் தனரே காக்க,

ஏகதந்தர் பகல்முழுதுங் காக்க, இர வினுஞ்சந்தி இரண்டன் மாட்டும் ஓகையின் விக் கினகிருது காக்க, இராக் கதர்பூதம் உறுவே தாளம் மோகினிபேய் இவையாதி உயிர்த்திறத்தால் வருந்துயரும் முடிவிலாத வேகமுறு பிணிபலவும் விலக்குபா சாங்குசர்தாம் விரைந்து காக்க,

மதிஞானத் தவந்தானம் மானம்ஒளி புகழ்குலம்வண் சரீர முற்றும் பதிவான தனந்தானி யங்கிரகம் மனைவிமைந்தர் பயில்நட் பாதிக் கதியாவும் கலந்து சர்வாயுதர்காக்க, காமர் பவுத் திரர்முன்னான விதியாருஞ் சுற்றமெலாம் மயூரேசர் எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க,

Koviloor Digital Library

வென்றிசீ விதங்கபிலர் காக்க, கரி யாதியெலாம் விகடர் காக்க, என்றிவ்வா றிதுதனைமுக் காலமும் ஓதிடினும்பால் இடையூறுறொன்னும் ஒன்றுறா முனிவரர்காள் அறிமின்கள் யார்ஒருவர் ஓதினாலும் மன்றவாங் கவர் தேகம் பிணியறவச் சிரதேகம் ஆகி மன்னும்.

ஸ்ரீ கணேச பஞ்சரத்னம்

முதா கராத்த மோதகம் ஸதா விமுக்தி ஸாதகம்
கலா தராவதம்ஸகம் விலாஸி லோக ரக்ஷகம்
அனாயகைக நாயகம் வினோசிதேப தைத்யகம்
நதாசுபாசு நாசகம் நமாமி தம் விநாயகம்
நதேதராதி பீகரம் நவோதிதார்க்க பாஸ்வரம்
நமத்சுராரி நிர்ஜரம் நதாதிகாப துத்தரம்
ஸுரேஸ்வரம் நிதீஸ்வரம் கஜேஸ்வரம் கணேஸ்வரம்
மஹேஸ்வரம் ஸமாஸ்ரயே பராத்பரம் நிரந்தரம்
ஸமஸ்த லோக ஸங்கரம் நிரஸ்த தைத்ய குஞ்ஜரம்
தரேதரோதரம் வரம் வரேப வக்த்ர மக்ஷரம்
க்ருபாகரம் க்ஷமாகரம் முதாகரம் யசஸ்கரம்
மனஸ்கரம் நமஸ்க்ருதாம் நவஸ்கரோமி பாஸ்வரம்
அகிஞ்சனார்த்தி மார்ஜனம் சிரந்தனோக்தி பாஜனம்

Koviloor Digital Library

புராரி பூர்வ நந்தனம் ஸுராரி கர்வ சர்வணம்
ப்ரபஞ்ச நாச பீஷணம் தனஞ்ஜயாதி பூஷணம்
கபோல தான வாரணம் பஜே புராண வாரணம்
நிதாந்த காந்தி தந்த காந்தம் அந்தகாந்தகாத்மஜம்
அசிந்த்ய ரூப மந்தஹீன மந்தராய க்ருந்தனம்
ஹ்ருதந்தரே நிரந்தரம் வஸந்தமேவ யோகினாம்
தமேக த்ந்தமேவ தம் விசிந்தயாமி ஸந்ததம்.

விநாயகர் வழிபாடு

ஸ்ரீ கற்பக விநாயகர் எனக்கு மங்களம் தந்தருள்க! ஆறுமுகப் பெருமான் எனக்கு மங்களம் தந்தருள்க! ஸ்ரீ மகேஸ்வரரும் எனக்கு மங்களத்தைத் தந்தருள்க! ஓம் என்னும் பிரணவ மந்திரத்தில் குடி கொண்டு யானை முகமும், நான்கு தோள்களும் பெருத்த தொந்தியும் வாய்ந்தவரான ஸ்ரீ கற்பக விநாயக மூர்த்தியை நான் தொடங்கும் சகல காரியங்களிலும் எந்தவித விக்கினங்களும் ஏற்படாமல் நிறைவேறுவதற்காக வணங்குகிறேன்.

Koviloor Digital Library

மங்கள முகம் வாய்ந்த ஸுமுகன், ஒற்றைக் கொம்பை உடைய ஏக தந்தன், கபில நிறம் வாய்ந்த கபிலன், யானைக் காதுகள் உள்ள கஜகர்ணன், பெரும் வயிற்றோடு கூடிய லம்போதரர், குள்ளத் தோற்றமுள்ள விகடர். சகல விக்கினங்களுக்கும் ராஜாவான விக்னராஜன், துஷ்டச் செயல்களையும் இடையூறுகளையும் நீக்குவதில் வல்லவரான விநாயகன் நெருப்பைப் போல் ஒளி வீசித் திகழ்பவரான தூமகேது, பூத கணங்களுக்குத் தலைவராக விளங்கும் கணுத்யக்ஷன், நெற்றியில் பிறைச் சந்திரனைச் சூடியவரான பாலசந்திரன், யானை முகத்தையுடைய கஜானனன், வளைந்த துதிக்கரமுள்ள வக்ரதுண்டன், முறம் போன்ற அகலமான காதுகள் உள்ள சூர்ப்பகர்ணன், தம்மை வணங்கி நிற்கும் பக்த கோடிகளுக்கு அருள் பொழியும் ஹேரம்பன், கந்தப் பெருமானின் தமையனரான ஸ்கந்த பூர்வஜன்.

Koviloor Digital Library

இவ்வாறு சொல்லப்படும் விநாயகப் பெருமானின் பதினாறு திருநாமங்களையும் வித்தைகளைக் கற்கத் தொடங்கும் போதும் வீட்டைவிட்டு வெளியில் கிளம்பிச் செல்லும் போதும், போர்க்காலத்திலும், இன்னல்கள் வந்த போதும், யாராவது வாசித்தாலும், அல்லது செவிகுளிரக் கேட்டாலும் அவர்களுக்கு எந்தவித விக்கினங்களுமே சம்பவிக்காது.

ஸ்ரீ கணேச போற்றி

தத்துவா தீத போற்றி
    தத்துவப்பொருளே போற்றி
தத்துவ முதலே போற்றி
    தத்துவ சொரூப போற்றி
தத்துவத் தியன்ற தாத்து
    விகங்களும் ஆனாய் போற்றி
தத்துவ அறிவுக் கெட்டாத்
    தயங்குபே ரறிவே போற்றி
உடலினுக் குயிரே போல
    உயிர்க்குயிர் ஆனாய் போற்றி

Koviloor Digital Library

உடலுயிர்க் கறிவு நல்கி
உடலினைக் கழிப்பாய் போற்றி
உடலுயிர் எனப்பின் நீங்கா
ஒற்றுமைப் பொருளே போற்றி
உடனுறை உயிர்க்கும் எட்டா
ஒளிர்பெருஞ் சோதி போற்றி
விரவுதத் துவத்தின் நீங்கி
மேலென நின்ற ஆவி
வரமுற உருவு கொண்டு
வந்தருள் குரவ போற்றி
பரவும்ஐ ந்தொழிலை நீக்கி
உயிரினைப் பணிப்பாய் போற்றி
துரியத்தின் உயிரை வாங்கும்
சுடர்ப்பெருங் கடலே போற்றி
பக்தர்கள் வழங்கா நின்ற
பலவுங்கைக் கொள்வாய் போற்றி
புத்திகள் போகத் தார்க்குப்
புணர்த்தருள் போகி போற்றி
முக்தியை யோகத் தார்க்குப்
முடித்தருள் யோகி போற்றி

Koviloor Digital Library

எத்தொ லவர்க்கும் அந்தப்
பயனருள் இறைவ போற்றி
வேண்டிய அடியார்க் கெல்லாம்
விக்கினங் கெடுப்பாய் போற்றி
வேண்டிவந் தனை செய் யார்க்கு
விக்கினங் கொடுப்பாய் போற்றி
வேண்டுவார் வேண்டிற் றெல்லாம்
விளைத்தருள் விமல போற்றி
மாண்டதுட்டர்களைக் கொல்லும்
மறமிகு மள்ள போற்றி
போற்றி போற்றி.

பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார்
பெருமை வாய்ந்த பிள்ளையார்
ஆற்றங்கரை ஓரத்திலே
அரச மரத்தின் நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார்
விளைகள் தீர்க்கும் பிள்ளையார்

-பிள்ளையார்

Koviloor Digital Library

யானை முகம் கொண்டவர்
ஐந்து கரங்கள் கொண்ட
பானை வயிறு படைத்தவர்
பக்தர் குறையைத் தீர்ப்பவர்
-பிள்ளையார்

மஞ்சளிலே செய்யினும்
மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் ஆழ்த்தும் பிள்ளையார்
-பிள்ளையார்

ஆறுமுக வேலனுக்கு
அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும்
நீக்கி வைக்கும் பிள்ளையார்
-பிள்ளையார்

அவல் கடலை சுண்டலும்
அரிய மோதகங்களும்
கவலையின்றி தின்னுவார்
கருணைமாரி பொழிகுவார்
-பிள்ளையார்

Koviloor Digital Library

கலியுகத்து விந்தைகளை
காணவேண்டி அனுதினம்
எலியின் மீது ஏறியே
இஷ்டம் போலச் சுற்றுவார்

–பிள்ளையார்

விநாயகர் 108 போற்றி

ஓம் வேழ முகத்து விநாயக போற்றி
ஓம் பேழை வயிற்றுப் பிள்ளாய் போற்றி
ஓம் ஏழைக்கு அருள்செய் எம்மான் போற்றி
ஓம் வாழ வகுக்கும் வள்ளால் போற்றி
ஓம் சிவனார் பெறுமுதல் செல்வா போற்றி
ஓம் சேயிழை உமைதரு சிறுவா போற்றி
ஓம் திருமால் தனக்கு மருகா போற்றி
ஓம் திருமகள் மகிழுமாப் பிள்ளாய் போற்றி
ஓம் யானை உரித்தவன் மகனே போற்றி
ஓம் யானையைக் காத்தவன் மருமான் போற்றி 10
ஓம் யானையின் கைபெறு கோனே போற்றி
ஓம் யானையால் வள்ளியை வென்றாய் போற்றி
ஓம் யானை மணாளனின் அண்ணா போற்றி
ஓம் யானை முகத்தானை அழித்தாய் போற்றி

Koviloor Digital Library

ஓம் பெருச்சாளி ஏறும் பெரியோய் போற்றி
ஓம் பேணுவார் பிழைகள் பொறுப்பாய் போற்றி
ஓம் வள்ளிதெய் வானை மைத்துன போற்றி
ஓம் வல்லபை மங்கை மணாளா போற்றி
ஓம் கடிமணம் விரும்பாக் கணேச போற்றி
ஓம் மடியினில் மாதினை வைத்தாய் போற்றி 20
ஓம் சித்தி புத்தியின் தெய்வமே போற்றி
ஓம் முத்தி கொடுக்கும் முதல்வ போற்றி
ஓம் மூலை முடுக்கெலாம் முளைத்தாய் போற்றி
ஓம் மூவிரு முகத்தோன் முன்னவ போற்றி
ஓம் சிதறுகாய் சிறுவருக்கு ஈவாய் போற்றி
ஓம் சிவன்தேர் அச்சினைச் சிதைத்தாய் போற்றி
ஓம் கொம்பு எழுத்தாணியாக் கொண்டாய் போற்றி
ஓம் எம்பிரான் பிறையதில் இணைத்தாய் போற்றி
ஓம் மலையினில் பாரதம் வரைந்தாய் போற்றி
ஓம் மலைமகள் மகிழுமா மணியே போற்றி 30
ஓம் முன்வணக் கங்கொள் முனைவ போற்றி
ஓம் பன்னிரு தம்பிகண் எண்ணினை போற்றி
ஓம் பின்னவன் முழுமிடப் பிணங்கினை போற்றி
ஓம் அன்னையின் அணைப்பால் ஆறினை போற்றி
ஓம் எண்ணுவார் இடரைக் களைவாய் போற்றி

Koviloor Digital Library

ஓம் எண்ணார் இடர்உற இழைப்பாய் போற்றி
ஓம் பரமன் மடியுறை பண்ணவ போற்றி
ஓம் பார்வதி ஈன்ற பாலா போற்றி
ஓம் அப்பம் அவல்பொறி கப்புவாய் போற்றி
ஓம் இப்புவி எல்லாம் இருப்பாய் போற்றி 40
ஓம் ஓங்காரப்பொருள் உணர்த்துவாய் போற்றி
ஓம் தீங்கெலாம் அகற்றும் செம்மல் போற்றி
ஓம் குட்டிக் குனிப்புறக் கொள்வாய் போற்றி
ஓம் பட்டி தொட்டிஎலாம் படர்வாய் போற்றி
ஓம் குளக்கரை தொறும்குடி கொண்டாய் போற்றி
ஓம் அளப்பறும் ஆற்றல்கொள் அம்மான் போற்றி
ஓம் அரசின் நிழல்அமர் அரசே போற்றி
ஓம் பரசுவார் பவப்பிணி அறுப்பாய் போற்றி
ஓம் அறுகினை ஆசையோடு அணிவாய் போற்றி
ஓம் உறுபெரு மோதகம் உவப்பாய் போற்றி 50
ஓம் உலகீன்ற கன்னியின் குலமுதல் போற்றி
ஓம் நலனெலாம் நம்பர்க்கு அருள்வாய் போற்றி
ஓம் மலைபோல் வருதுயர் மாய்ப்பாய் போற்றி
ஓம் கலையெலாம் கருத்துள் வளர்ப்பாய் போற்றி
ஓம் அலகிலா விளையாட்டு அயர்வாய் போற்றி
ஓம் உலகெலாம் அடக்கிய உந்தியாய் போற்றி

Koviloor Digital Library

ஓம் மலைமகள் மடிதவழ் மைந்தா போற்றி
ஓம் நலம்நுகர் அவர்திறம் நகைப்பாய் போற்றி
ஓம் புலவர்க்கு விருந்தாய்ப் பொலிவாய் போற்றி
ஓம் கலக லெனச்சிறார்க் கவர்வாய் போற்றி 60
ஓம் பேரொளி பரப்பும் பெருமுடி போற்றி
ஓம் பாரதம் எழுதிய ஓர்பிறை போற்றி
ஓம் கூருறும் மற்றைக் கொம்பும் போற்றி
ஓம் கார் என அருள்பொழி கண்இனை போற்றி
ஓம் நான்மறை பகர்ந்தருள் நால்வாய் போற்றி
ஓம் வான்குறை கேட்டருள் மாச்செவி போற்றி
ஓம் மோதக மணநுகர் மூக்குப் போற்றி
ஓம் போதகப் புண்ணியப் பொலிமுகம் போற்றி
ஓம் மண்முழுது அடக்கிய வயிறு போற்றி
ஓம் கண் அகல் உந்திக் கமலம் போற்றி 70
ஓம் வாரி வழங்கு, கை ஐந்தும் போற்றி
ஓம் சீரியோர் முடிபடி திருவடி போற்றி
ஓம் சிவனார் கோயிலில் திகழ்வாய் போற்றி
ஓம் தவமாச் செல்வர் சொல்தவமே போற்றி
ஓம் அம்பிகை கோயிலும் அமர்வாய் போற்றி
ஓம் நம்பினார் துன்பமெலாம் நலிவாய் போற்றி
ஓம் தம்பி கோயிலும் தங்குவாய் போற்றி

Koviloor Digital Library

ஓம் உம்பரும் போற்றும் ஒருவ போற்றி
ஓம் காளி கோயிலும் தங்குவாய் போற்றி
ஓம் ஊழி தோறும் உலவாய் போற்றி 80
ஓம் பெருமாள் கோயிலும் பிறங்குவாய் போற்றி
ஓம் திருமால் தங்கைநற் செல்வா போற்றி
ஓம் அடியார் கோயிலும் அமர்வாய் போற்றி
ஓம் கடிசேர் அறுகணி கணபதி போற்றி
ஓம் தனிப்பெருங் கோயிலும் சார்வாய் போற்றி
ஓம் மனித்தரைக் கவர்தரு வள்ளால் போற்றி
ஓம் எங்கும் இருக்கும் இறைவ போற்றி
ஓம் மங்களம் தொடங்கமுன் வருவாய் போற்றி
ஓம் கங்கை அணிந்தவன் கனியே போற்றி
ஓம் நங்கை உமைதரு புங்கவ போற்றி 90
ஓம் எளிமையில் அருள்புரி இறைவ போற்றி
ஓம் ஏழைகள் பங்கில் இருப்பவ போற்றி
ஓம் தும்பிக் கை, பெறு தோன்றால் போற்றி
ஓம் தம்பிக்கு வள்ளியைத் தந்தாய் போற்றி
ஓம் அறிவு மதம் பொழி ஆனையே போற்றி
ஓம் குறைவிலாப் பெருங்குணக் குன்றே போற்றி
ஓம் கூத்துடை யான்தரு குமரா போற்றி
ஓம் கூத்துகத்து ஆடும் குரிசில் போற்றி

Koviloor Digital Library

ஓம் சந்திதோறு இருக்கும் தத்துவ போற்றி
ஓம் சிந்தையுட் புகுந்த தேவா போற்றி 100
ஓம் கணநாத போற்றி
ஓம் கயமுகா போற்றி
ஓம் விநாயகா போற்றி
ஓம் விக்கின போற்றி
ஓம் எண்ணிய ஈவாய் போற்றி போற்றி
ஓம் புண்ணியப் பிள்ளையார் போற்றி! போற்றி
ஓம் விடலைக்காய் ஏற்பவனே போற்றி
ஓம் வெற்றியளிப்பவனே போற்றி 108

பிள்ளையார்பட்டி பிள்ளையார்

அற்புதக் கீர்த்தி வேண்டின்
ஆனந்த வாழ்க்கை வேண்டின்
நற்பொருள் குவிதல் வேண்டின்
நலமெலாம் பெருக வேண்டின்
கற்பகமூர்த்தி தெய்வக்
களஞ்சியத் திருக்கை சென்று
பொற்பதம் பணிந்து பாரீர்
பொய்யிலை கண்ட உண்மை.

-கவிஞர் கண்ணதாசன்

Koviloor Digital Library

வேழ முகம்

குறள் - காப்பு

வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்.
வெற்றி முகத்து வேலவனைத் தொழப்
புத்தி மிகுத்து வரும்.
வெள்ளிக் கொம்பன் விநாயகனைத் தொழத்
துள்ளி யோடுந் தொடர்ந்த வினைகளே.
அப்ப முப்பழம் அமுது செய் தருளிய
தொப்பை யப்பனைத் தொழவினை யருமே.

பிள்ளையார் சிந்தனை

சிந்தித் தவர்க்கருள் கணபதி ஜெய ஜெய
சீரிய ஆனைக் கன்றே ஜெய ஜெய
அன்புடை அமரரைக் காப்பாய் ஜெய ஜெய
ஆவித்துணையே கணபதி ஜெய ஜெய
இண்டைச் சடைமுடி இறைவா ஜெய ஜெய
ஈசன் தந்தருள் மகனே ஜெய ஜெய
உன்னிய கருமம் முடிப்பாய் ஜெய ஜெய
ஊர்நவ சந்தி யுகந்தாய் ஜெய ஜெய

Koviloor Digital Library

எம் பெரு மானே இறைவா ஜெய ஜெய
ஏழுல குந்தொழ நின்றாய் ஜெய ஜெய
ஐயா கணபதி நம்பியே ஜெய ஜெய
ஒற்றை மருப்புடை வித்தகா ஜெய ஜெய
ஓங்கிய ஆனைக் கன்றே ஜெய ஜெய
ஔவிய மில்லா வருளே ஜெய ஜெய
அஃகர வஸ்து ஆனவா ஜெய ஜெய
கணபதி என்வினை களைவாய் ஜெய ஜெய
ஙப்போல் மழுவொன் றேந்தியே ஜெய ஜெய
சங்கரன் மகனே சதுரா ஜெய ஜெய
ஞயநம் பினர்பா லாடியே ஜெய ஜெய
இடம்பட விக்கின விநாயகா ஜெய ஜெய
இணங்கிய பிள்ளைகள் தலைவா ஜெய ஜெய
தத்துவ மறைதரு வித்தகா ஜெய ஜெய
நன்னெறி விக்கின விநாயகா ஜெய ஜெய
பள்ளியி லுறைதரும் பிள்ளாய் ஜெய ஜெய
மன்று ளாடும் மணியே ஜெய ஜெய
இயங்கிய ஞானக் குன்றே ஜெய ஜெய
அரவக் கிண்கிணி ஆர்ப்பாய் ஜெய ஜெய
இலவக் கொம்பொன் றேந்தியே ஜெய ஜெய
வஞ்சனை பலவுந் தீர்ப்பாய் ஜெய ஜெய

Koviloor Digital Library

அழகிய ஆனைக் கன்றே ஜெய ஜெய
இளமத ஆனை முகத்தாய் ஜெய ஜெய
இரகுபதி விக்கின விநாயகா ஜெய ஜெய

அனந்தலோ டாதியி லடிதொழ வருளே
பிள்ளையார் சிந்தனை முற்றிற்று.

சரஸ்வதி சிந்தனை

புத்தகத்துள்ளுறை மாதே பூவில்
அமர்ந்துறை வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்
வேதப் பொருளுக்கிறைவி
முத்தின் குடையுடையாளே
மூவுலகுந் தொழுதேவி
செப்புக வித்தன முலையாய்
செவ்வரி ஓடிய கண்ணாய்
முத்து நிறைந்த வெண்பல்லாய்
முருக்கம்பூமேனி நிறத்தாளே
தக்கோலந்தின்ற துவர்வாயாய்
எக்காலு முன்னைத் தொழுவோம்.
எழுத்தறிபுத்தி பண்ணி வைப்பாய்

Koviloor Digital Library

ஆக்கா எம் பெருமாட்டி
அழகிய பூவணை மீதாய்
நோக்கா என்மிடி தீர
நொடிக்கும் பிராமணத்தி னோக்காயே
சாலுநெல்லரிசி கொண்டு
சரஸ்வதி பூசை பண்ணி
பாலொடு பழத்தை நிரப்பி
பராவித் தொழுவோம் நங்காய்
நங்காய் நங்காய் நமோஸ்து
ஞானக் கொழுந்தே நமோஸ்து
கல்விக்கரசே நமோஸ்து
கணக்கறி தேவிநமோஸ்து
சொல்லும் பொருளே நமோஸ்து
சூட்சுமரூபி நமோஸ்து.

சரஸ்வதி சிந்தனை முற்றிற்று.

துதிப்பாடல்கள்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

-தேவாரம்

Koviloor Digital Library

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

-திருமந்திரம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்
தன்மையினால் கண்ணிற் பணிமின் கனிந்து.

-மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை

மொழியின் மறைமுதலே முன்நயனத் தேறே
கழியவரு பொருளே கண்ணே - தெழிய
கலாலயனே எங்கள் கணபதியே நின்னை
அலாதையனே சூழாதென் அன்பு.

Koviloor Digital Library

சுடர்ப்பிழம்பு தழைத்த அழல்தனி நெடுவேல்
சேய்மூ வுலகும் வலம்வர ஏய
கொன்றையம் படலத் துன்றுசடைக் கணிந்த
ஓங்கிருந் தாதை யைவளாய் மாங்கனி
அள்ளல் தீஞ்சுவை அருந்திய
வள்ளிற் கிங்கென் மனங்கனிந்திடுமே

- மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்
தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி
இடைப்படுத்தி தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிச்சித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்.

- திருவிளையாடற் புராணம்

ஒருகோட்டான் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாயைங் கரத்தன் ஆறு
தருக்கோட்டம் பிறைஇதழித் தாழ்சடையான்
தருமொருவா ரணத்தின் தாள்கள்

Koviloor Digital Library

உருகோட்டன் பொடும்வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகோட்டும் அயன்திருமால் செல்வமும்ஒன்
றோவென்னச் செய்யும் தேவே.

- சிவஞான சித்தியார்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

- மூதுரை

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன்-கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.

- நல்வழி

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்.

- சேக்கிழார் நாயனார் புராணம்

Koviloor Digital Library

தழைவிரி கடுக்கைமாலைத்
    தனிமுதல் சடையிற் சூடும்
குழவிவெண் திங்கள் இற்றகோட்டது
    குறையென் றெண்ணிப்
புழைநெடுங் கரத்தாற் பற்றிப்
    பொற்புற இணைத்து நோக்கும்
மழைமதக் களிற்றின் செய்ய
    மலரடி சென்னி வைப்போம்

- நைடதம்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 15254

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஹரே கிருஷ்ணா

தங்கமயில்

தங்கம் + வைரம் + வெள்ளி + பிளாட்டினம்

கிளைகள்

மதுரை (நேதாஜி ரோடு ❋ அண்ணாநகர்) ❋ இராஜபாளையம் ❋ காரைக்குடி

இராமநாதபுரம் ❋ திண்டுக்கல் ❋ தேனி ❋ சிவகாசி ❋ தூத்துக்குடி ❋ கம்பம்

அருப்புக்கோட்டை ❋ சேலம் ❋ தென்காசி ❋ பழநி ❋ கோயம்புத்தூர் ❋ வெள்ளக்கோவில்

தாராபுரம் ❋ வள்ளியூர் ❋ கிருஷ்ணகிரி ❋ நாமக்கல் ❋ தருமபுரி ❋ ஒட்டன்சத்திரம்

தங்கம் வாங்க தங்கமயிலுக்கு வாங்க!